**கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை - திருமதி ஆர். செந்தில்குமாரி**

**சுருக்கம்**

பணிக்குழு - தொழிலாளர் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திரு.அ.செந்தில்குமார், தட்டச்சர், கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகம், கோவை - தட்டச்சர் பதவியில் 08.05.2013 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதி காண் பருவத்தில் வைத்து - உத்தரவிடப்படுகிறது.

---

ந.க.எண்.அ/4119/2019

நாள் - 16.10.2019.

**படிக்கப்பட்டது**

1. அரசாணை எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்-14.12.1995.
2. அரசாணை எண்.190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்-20.09.2007.
3. தமிழ்நாடு, அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.781/PSD-A4 /2012, நாள்-04.03.2013.
4. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். ஜி3/6045/2013-III, நாள்-25.04.2013.
5. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/19177/2016, நாள்-23.05.2018.
6. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் குறிப்பாணை எண் .ஜி3/6045/2013, நாள்-01.10.2019.

---------------

**ஆணை**

மேலே 3-ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே 4-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி தமிழ்நாடு மாநில சார்நிலைப்பணி விதிகளின் கீழான பொது விதி 10(ஏ)(1)-ன்படி தட்டச்சராகப் பணியமர்த்தப்பட்ட திரு.அ.செந்தில்குமார், என்பவர் 08.05.2013 முற்பகல் கோவை, தொழிலாளர் ஆய்வர் (மகளிர்) தற்போது தொழிவாளர் உதவி ஆணையர் (மகளிர் நலம்) அலுவலகத்தில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்து, மேலே 5-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலக தட்டச்சராக பணியிடமாற்றம் மூலம் பணியமர்த்தப்பட்டு 01.06.2018 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேலே 6-ல் படிக்கப்பட்ட சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களது குறிப்பாணையில் அறிவுறுத்தப்பட்டவாறு இவர் பணியில் சேர்ந்த நாளான 08.05.2013 முற்பகல் முதல் தட்டச்சர் பணியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு, அந்நாள் முதல் தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுவதுடன் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு



பணிக்காலத்தில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டுமென இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34-ன்படி மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், மற்றும் அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்-22.07.2008-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு Directorate of Technical Education நடத்தும் "Certificate course in Computer on Office Automation" என்ற பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

ஆர். 16/10/19

கூடுதல் தொழிலாளர் ஆணையர்,
கோவை.

16/10/19

பெறுநர்
திரு.அ.செந்தில்குமார்,
தட்டச்சர்,
இவ்வலுவலகம்
(உரிய வழியாக)

நகல் -
பணிப்பதிவேடு/முக்கியஆணைத் தொகுப்பு

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது-
தொழிலாளர் ஆணையர், சென்னை - 06.